REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 8630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 21உ சனி (6—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 22உ ஞாயிறு (7—11—54) [இதழ் 125

## தாழ்த்தப்பட்ட குழந்தையை வளர்த்தால் மாதம் ரூ. 20 அளிக்கப்படும்!

அகமதாபாத், நவ. 6—

அரிசனக் குழந்தை ஒன்றைத் தனது குடும்பத்தில் ஒரு உறுப்பினராக வைத்துக்கொண்டு வளர்க்கும் ஒவ்வொரு ஜாதி இந்துவுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 கொடுப்பது என்று பம்பாய் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்களாம்.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சினைக்காகவே இப்படிப்பட்ட முடிவை பம்பாய் சர்க்கார் செய்திருக்கிறார்களாம்.

# காங்கிரஸ் தியாகிகளுக்குப் புதிய யோகம்!

## சிற்பக் கலைத் துறைக்கு தேவைப்படும் அத்தாட்சி

### சிறை சென்ற சிற்பிகளுக்கு முதற். சலுகை

### ஆந்திர சர்க்காரின் ஓரவஞ்சனை

"மனு கொடுப்பவர், நாட்டின் விடுதலைக்காகத் தியாகம் செய்திருக்கிறாரா? அல்லது தேசிய இயக்கங்களில் பங்குகொண்டு இருக்கிறாரா? அவர் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளின் முழு விவரம் (கைது செய்யப்பட்டும், சிறையில் வைக்கப்பட்டும், சர்க்கார் பரீட்சையில் கலந்துகொள்ளாது தடுக்கப்பட்டும்) அதற்கான மூல ஏடுகளுடனும், நாட் குறிப்புடனும் மனு செய்துகொள்ள வேண்டும்."

இப்படி, ஒரு நிபந்தனை கொண்ட விளம்பரத்தை, சர்க்கார் சிற்பத் துறைக்கு ஒரு ஆலோசகரைப் பொறுக்கி எடுப்பதற்கு, ஆந்திர சர்க்கார் செய்திருக்கிறது. வருகிற மனுக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆந்திர சர்வீஸ் கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இதுபற்றி இந்திய சிற்பக் கலைக் கழக இதழ் கண்டித்து எழுதியுள்ளதாவது:—

"எந்த வகையிலும் அத்தகைய ஒரு கேள்வி நியாயமானதல்ல; அந்தக் கேள்வி, நிர்வாகத்திற்கான அடிப்படைக் கொள்கைக்கே முரண்பட்டதாகும். நிர்வாகத்தின் அடிப்படைக் கொள்கை, ஒரு குறிப்பிட்ட வேலையை, அந்த வேலைக்குத் தேவையான யோக்கிய தாம்சம் பெற்றவர்களே நிர்வகிக்க வேண்டுமென்றிருக்கிறது. அந்த யோக்கியதாம்சம் ஒருவர் செய்துள்ள அரசியல் சேவைகளையோ அன்றி அனுபவித்த சிறைக் கொடுமைகளையோ வைத்துக் கணக்கிடப்படுவதில்லை. ஆனால், மாறாக, ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்கான கல்வி அறிவு, தொழில் நுணுக்க அறிவு, அவ்வேலையில் அவர் பெற்றுள்ள அனுபவத்தின் அளவு, தரம் இவைகளைப் பொறுத்துத்தான் ஒருவர் அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான யோக்கியதாம்சமாகக் கணக்கிடப்படும்.

சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கான சிற்பக் கலை நியமிக்கப்படுவதற்கும், ஒருவர் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கு பெற்ற தகுதி உடையவர் என்பதற்கும் தொடர்பிருப்பதாக யாரும் கூற முடியாது.

அத்தகைய ஏற்பாடுகள், அரசாங்க நிர்வாகத் துறையின் திறனை அதிகரிக்கும் என்று எங்களுக்குப் படவில்லை.

சிற்ப நிபுணர்கள், எஞ்சினீயர்கள், டாக்டர்கள் இவர்களை நீக்கி விட்டுப் பார்த்தால், பொதுவாக, அரசியல்வாதிகள் நல்ல நிர்வாகிகளாக இருப்பதில்லை. தேச விடுதலைக்காக சிறை செல்வதென்பது, ஒருவரின் தேசப்பற்று மிகுந்த செய்கையெனக் கொள்ளலாம். ஆனால், அதற்காக, சிறை சென்றவர்களுக்குப் பரிசாக சர்க்கார் உத்தியோகங்கள் வழங்குவது அரசாங்கத்தினுடையவும், நாட்டுப் பற்றுக் கொண்டோர் நல்கிய தியாகத்தினுடையவும் அடிப்படையையே தகர்த்துவிடுகிறது. தியாகத்திற்கு பரிசளிக்கப்படும்போது தியாகம் என்ற சொல்லே அதன் பொருளை இழந்துவிடுகிறது.

சர்க்கார் உத்தியோகத்திற்கு நியமிக்கப்படுகிறவரின், அரசியல் யோக்கியதாம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொள்வதில் பெரும் அபாயமும் இருக்கிறது.

ஒரு அரசாங்கம் இதை ஒரு பழக்கமாக வைத்துக் கொள்ளுமானால் இதே கொள்கையை தாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது, இதர அரசியல் கட்சிகளும், மேற்கொள்ளக்கூடும்.

அத்தகைய ஒரு நிலை, பொறுத்துக் கொள்ள இயலாததாகும்; அந்த நிலை உருவாகுமானால், அது, சர்க்கார் அலுவல்களையும் நிர்வாகத்தையுமே அவமதிப்பதாக ஆகிவிடும்."

## நேபாளத்தில் இந்திய எதிர்ப்பு உணர்வு!

### அமைச்சர் பதவி பெருந்தோர் அதை வளர்க்கின்றனராம்!

புதுடில்லி, நவ. 4—

நேபாளத்தில், இந்தியாவிற்கெதிரான உணர்வு வளர்ந்து வருவதற்கான காரணங்கள் பற்றி இப்போது இந்தியப் பிரதமர் பண்டித நேரு-நேபாள பிரதமர் கோய்ராலா இவர்களிடையே விவாதிக்கப்படுகின்றன.

நேபாள மந்திரி சபையில் யார் யாருக்கு இடம் கிடைக்கவில்லையோ அவர்கள் எல்லாம், இந்திய எதிர்ப்பு உணர்வை வளர்க்க முற்பட்டு விடுகின்றனராம்.

இந்தியாவின் ஆதரவை யார் பெற முடியுமோ அவர்களை மட்டுமே, அரசர், மந்திரி வேலைக்குப் பொறுக்கியெடுக்கிறார் என்ற எண்ணமும் அங்கு நிலவுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்திய எதிர்ப்பு உணர்வு கொண்ட தலைவர்களில் பெரும்பாலானோர், நேபாளத்தில் ராணு ஆட்சியை எதிர்த்தவர்கள்; ஆகவே, அவர்கள் எல்லோரும் தங்களுக்கு மந்திரி பதவி வேண்டுமென எதிர்பார்க்கின்றனர் என்று சொல்லப்படுகின்றது. அவர்கள் எல்லோருக்கும் மந்திரி பதவி தருவதென்பதும் சாத்தியமில்லை.

நேபாள நிலை நாளுக்கு நாள் படுமோசமாகி வருவதைக் குறித்து இரண்டாம் முறையாக இன்று இந்தியப் பிரதமர் நேருவை நேபாளப் பிரதமர் கொய்ராலா சந்தித்து விவாதித்ததாகத் தெரிகிறது.

இதற்கு முன், பண்டிதர் நேருவுக்குப் பயணமாகுமுன், கல்கத்தாவில் அவர்கள் இருவரும் கூடிப் பேசினர் எனத் தெரிகிறது.

இப்போது நேபாள நிலைகள் நாளுக்கு நாள் படுமோசமாகி வருகிறது; எப்போதுதான் அங்கு, ஒரு உறுதியான, நிலையான அரசாங்கம் உருவாகுமெனச் சொல்வதற்கில்லை.

நேபாளத்தில் 27 அரசியல் கட்சிகள் இருக்கின்றனவாம். அவற்றில் பல சட்டசபையில்தான் இடம் பெற்றிருக்கின்றனவே தவிர, நாட்டில் அக்கட்சிகள் பலவற்றிற்கு எவ்வித ஆதரவும் இருப்பதாகக் கூற முடியாதெனவும் சொல்லப்படுகிறது.

### பசு வளர்ப்பு நிலையங்கள்

#### ரூ. 7 கோடி செலவு?

பசு வளர்ப்பு நிலையங்களுக்காக ஆண்டொன்றுக்கு சுமார் 7 கோடி ரூபாய் வரை, 3,000 தனிப்பட்ட நிலையங்கள் செலவிடுகின்றன என்றும், இந்தத் தொகையில் 20 சதவிகிதம் கால்நடை அபிவிருத்திகளுக்காகச் செலவிடப்படுகிறதென்றும் தெரிகிறது.

#### துவரை சாகுபடி

நடப்பு ஆண்டில் துவரை சாகுபடி விஸ்தீரணம் 55,26,000 ஏகராவாக இருக்குமென்று தெரியவருகிறது. முந்திய ஆண்டில் இதற்குச் சரியான திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சாகுபடி விஸ்தீரணம் 54,59,000 ஏகராவாக இருந்தது. எனவே, நடப்பு ஆண்டில் சாகுபடி விஸ்தீரணம் 67,000 ஏகரா அதிகரித்திருக்கிறது.

## குறிப்பிட்ட வகுப்பினரையே தலைவராக்கப் பிடிவாதம்!

### 'முடியாது' என பலர் எதிர்வாதம்

### காங்கிரஸ் கூடாரத்தில் ஜாதிப் பூசல்!

★

வடாற்காடு மாவட்ட மன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவரையே தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தமிழ் நாடு காங்கிரசின் தலைவர் கரையாளர், காங்கிரஸ் உறுப்பினர்களை வற்புறுத்தியதாகவும், வேறு அபிப்பிராயங்களைக் கேட்பதற்கு அவர் மறுத்ததாகவும் தெரிகிறது.

வடாற்காடு மாவட்ட மன்றத்திற்குத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ்காரர்களிடையே பிளவு ஏற்பட்டு, காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுற்றதும், அதன் காரணமாக முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் பெருமாள்சாமி ரெட்டியார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதும் நேயர்கள் அறிந்ததே.

இத்தேர்தலில், தமிழ் நாடு காங்கிரசின் தலைவர் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவரையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியதுமன்றி, மற்றவர்களின் கருத்தைக் கேட்கவும் அவர் மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

தோழர் கரையாளரின் இப்போக்கை எதிர்த்து 36 உறுப்பினர்களில் 20 பேர், தலைவர் தேர்தலுக்கு மற்றொரு காங்கிரஸ் உறுப்பினர் டி. பி. கேசவ ரெட்டியாரை நிறுத்தத் தீர்மானித்தார்களாம்!

## பல்கலைக் கழக திருத்தச் சட்டத்தை எதிர்த்து!

### அலகாபாத் மாணவர் அடையாள வேலை நிறுத்தம்

அலகாபாத் பல்கலைக் கழக மாணவர்களில் பெரும்பான்மையினர், மீண்டும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். மாணவர் சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க நடைபெற்ற இவ்வேலை நிறுத்தத்தில், வகுப்புகள் துவங்கப்படுவதற்கு முன்னதாகவே, கூட்டம் கூட்டமாக மாணவர்கள் திரண்டு, கோரிக்கையை உரத்து ஒலித்துக்கொண்டிருந்தனர். பின்னர் அணிவகுத்து பல்கலைக் கழக நகருக்குள் ஊர்வலமாகச் சென்றனர்.

உத்திரப் பிரதேச சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பல்கலைக் கழகத் திருத்தச் சட்டத்தை எதிர்த்தே, ஒரு நாள் அடையாள மறியலை மாணவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

நகரிலுள்ள மற்ற மூன்று மாணவர் சங்கங்களும், பல்கலைக் கழக மாணவர்களின் வேலை நிறுத்தத்திற்கு முழு ஆதரவு கொடுத்தன.

முற்பகலில் பல்கலைக் கழகப் பணி மந்தமாக நடைபெற்றபோதிலும், பிற்பகலில் வழக்கம்போலவே வகுப்புகள் அனைத்தும் நடைபெற்றதாகவும், ஆனால், மாணவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைந்து காணப்பட்டதாகவும், பல்கலைக் கழக அதிகாரிகள் கூறினார்கள் என்று தெரிகிறது.

## கம்யூனிஸ்டு ஆட்சியைக் கவிழ்க்க செக். சோஷலிஸ்டுகள் வேவு பார்த்தனராம்!

### மூவருக்கு ஆயுள் தண்டனை; பலருக்கு பல்லாண்டு சிறை

செக்கோஸ்லாவேக்கியா சோஷலிஸ்டு கட்சியின் முன்னாள் தலைவர்கள் மூன்று பேர் பிரேக் உயர் நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு பேருக்கு 5 ஆண்டுகளும், பலருக்கு சற்று குறைவான ஆண்டுகளும் சிறை தண்டனை தந்தும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாம்.

தண்டனை தரப்பட்டுள்ள சோஷலிஸ்டுகள் மீது, வேவு பார்த்ததாகவும், ராஜத்துரோகமான காரியங்களில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டன.

மொத்தம் எத்தனை பேர் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டனர் என்ற முழு விவரங்கள் அறிவிக்கப்படவில்லை.

அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பெற்ற இரகசியமான உத்திரவுகளின் பேரில், ஒற்றர் வேலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டனராம்.

"இப்போதுள்ள செக்கோஸ்லாவேக்கியா மக்கள் ஜனநாயக ஆட்சி(கம்யூனிஸ்டு)யை, மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் கவிழ்த்துவிடுவதே, இந்த சோஷலிஸ்டு கும்பலின் லட்சியம்" என்று பிரேக் வானொலி அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறது.

ஆயுள் தண்டனை தரப்பட்டவர்களில் ஒருவர், கடந்த 1948-ல், செக். நாட்டில் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்தபோது, அமெரிக்காவிற்கு ஓடிப்போய் சரண்புகுந்த வலதுசாரி சோஷலிஸ்டுகளின் நெருங்கிய நண்பர் எனச் சொல்லப்படுகிறது.

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 6—11—1954 சனி


# திரு-கொ. தமிழர் வெற்றி பெற?

மக்கள் சோஷலிஸ்ட் கட்சி தான், திருவாங்கூர்—கொச்சி ஆட்சியை நடத்தி வருவதாக நம்பப்படுகிறது. அந்தக் கட்சியைச் சார்ந்த பட்டம் தாணு தான் பிரதமராக இருந்து அமைச்சர் குழுவையும் நடத்தி வருகிறார். வெளிப்படையாகப் பார்த்தால் இதுதான் உண்மை என்று தோன்றும். ஆனால் உண்மை, நடைமுறையில் நாம் காண்பதற்கு நேர் முரணாக இருக்கிறது.

நூற்றுக்கு மேல் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட சபையில், பத்தொன்பது உறுப்பினர்களை மட்டுமே கொண்ட ம. சோஷலிஸ்டு கட்சி மந்திரி சபை அமைத்து, அரசாங்கத்தைத் திறம்பட நடத்துவது என்பது முடியாத காரியம். சட்டசபைக்குக் கட்டுப்பட்டே ஒரு அரசாங்கம் செயல்பட்டாக வேண்டும். எனவே, சட்டசபையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒத்துழைப்பு இருந்தாலல்லாது, குறிப்பிட்ட ஒரு சிறுபான்மைக் கட்சி அரசாங்கம் ஒரு விநாடிகூட உயிருடன் வாழ முடியாது.

ம. சோ. கட்சி அரசாங்கத்தை அரியாசனத்தில் அமர்த்தியது, திரு-கொச்சி காங்கிரசேயாகும். அதே காங்கிரஸ் தான், அந்த ஆட்சியை வீழ்ந்து விடாமல் முட்டுக் கொடுத்துத் தாங்கி, இன்றுவரை பாதுகாத்தும் வருகிறது. ம. சோ. கட்சி ஆட்சிக்குப் பக்கபலமாக இருந்துவருவதை, காங்கிரஸ் கட்சி கொஞ்சம் தளர்த்தினாலும், அந்தக்கணமே பட்டம் தாணுவின் அமைச்சர் குழுவே குப்புறக் கவிழ்வது திண்ணம்.

தாம் அதிகாரத்தில் அமர்ந்ததற்கும், மேலும் ஒட்டிக் கொண்டு இருப்பதற்கும், காங்கிரஸ் கட்சி கொடுத்துவரும் ஆதரவு பலம்தான் காரணம் என்றுள்ள நிலையில், காங்கிரசின் விருப்பத்திற்கு மாறாக ம. சோ. கட்சி ஆட்சி தம்மிச்சையாக நடந்து கொள்வது என்பதும் எதிர்பார்க்கக் கூடாதது. தம்மிச்சையாக நடக்க முற்பட்டால், தமது அதிகாரத்திற்கே ஆபத்து ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்கும் பொழுது, தம்மிச்சையாக நடக்க வேண்டும் என்று நினைத்துப் பார்க்கக்கூட ம. சோ. கட்சி முன்வரவே வராது என்பது நிச்சயம். எனவே, இந்தக் கூட்டுறவு முறையின் படி, ஆட்சியில் உள்ள ம. சோ. கட்சி புரிந்துவரும் திருவிளையாடல்கள் அனைத்துக்கும், காங்கிரஸ் கட்சியின் தீவிர ஒத்துழைப்பு இருக்கத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு கட்டிவிடுவதில் சிறிதளவு தவறும் கிடையாது. அதுமட்டுமல்லாமல், குறிப்பிட்ட சில துறைகளில், ஆட்சியிலுள்ள ம. சோ. கட்சி இன்னின்ன முறையில்தான் நடந்து கொள்ள வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்தவும் செய்யும் என்பதும் உறுதியாக உரைக்கக்கூடியதேயாகும்.

மேற்கூறிய ம.சோ. கட்சி—காங்கிரஸ் கூட்டுறவிலிருந்து வெளிப்படையாக விளங்குவது ஒன்றேதான். அதாவது, சிறுபான்மை உறுப்பினர்களைக் கொண்ட ம. சோ. கட்சியை ஆட்சியில் உட்கார வைத்து விட்டு, தாம் விரும்பும் செயல்கள் அனைத்தையும், அந்தக் கட்சியைக் கொண்டு காங்கிரஸ் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ளுகிறது என்ற மகத்தான உண்மைதான் விளக்கமாகிறது.

இந்த உறவு, ம. சோ. கட்சிக்கு மானக்கேடு! காங்கிரஸ் கட்சிக்கு மட்டற்ற வெற்றி! மேற்படி ஏற்பாட்டினால் நஷ்டப்படப்போவது ம. சோ. கட்சியே அல்லாது காங்கிரஸ் கட்சி அல்ல. காங்கிரசிற்குக் காதொடிந்த ஊசி அளவு நஷ்டம் ஏற்படாததோடு மட்டுமல்லாமல், குறிப்பிடத் தகுந்த அளவில் இலாபமும் உண்டு என இப்படி கணக்கிட்டுப் பார்த்துப் பூரிப்படைகிறவர்களும் உண்டு. இப்பூரிப்படைகிறவர்கள் பட்டியலில் மூன்றுதர, நான்காந்தர காங்கிரஸ்காரர்கள் மட்டுமே இருப்பதாக எண்ணத் தேவை இல்லை. அத்தகைய அற்ப சந்தோஷத்தில் மூழ்கிக்கிடக்கும் முதல்தர காங்கிரஸ் தலைவர்களும் உண்டு.

முதல்தர காங்கிரஸ்காரர் என்ற பட்டியலில் உள்ளவர் காங்கிரஸ் செயலாளர் பல்வந்த்ராய். அவரே, திரு-கொச்சி காங்கிரஸ் நடைமுறை கண்டு பூரிப்படைந்திருக்கிறார். அடுத்த தேர்தலில் காங்கிரஸ் முழு வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமரும் என அவர் ஆனந்தத்தோடு குறிப்பிட்டும் இருக்கிறார்.

ம. சோ. கட்சியின் ஆட்சிப் போக்கு, அடுத்த தேர்தலில் காங்கிரசிற்கு வெற்றி தரும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது என்பதை, தமது பூரிப்புக்கான காரணமாக, பல்வந்த்ராய் குறிப்பிட்டிருக்கிறார். மக்களுக்குள்ள நினைவை மிக மிகக் குறைவாக மதிப்பிட்டுக் கொண்டதின் விளைவினால் தான், அத்தகைய நம்பிக்கைக் கொள்ள பல்வந்த்ராய் முன்வந்திருக்கிறார் என நாம் நம்புகிறோம்.

பல்வந்த்ராயின் நம்பிக்கைக்கு எது காரணமாக இருந்தாலும் இருக்கட்டும். ஆட்சிப் பொறுப்பில் உள்ள மக்கள் சோஷலிஸ்டு கட்சி அரசாங்கம், காங்கிரஸ் கட்சியின் பின்னணி பலத்தினால்தான், பேயாட்டம் ஆடி வருகிறது என்பதை திரு-கொச்சி மக்கள் ஐயமற தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை, அவர் தெரிந்து கொள்ள வேண்டும். திரு-கொச்சி தமிழர்களின் கோரிக்கையை பட்டம் தாணு அலட்சியப்படுத்துவதும் காங்கிரஸ் கட்சியின் தூண்டுதலினால் தான் என்ற உண்மையை அங்குள்ள தமிழர்கள் அறிந்து கொண்டுள்ளனர் என்பதையும், பல்வந்த்ராய் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர் கோரிக்கையை ஒழித்துக்கட்ட ஆகஸ்டு 10-ந் தேதி பட்டம் ஆட்சி ஆடிய 'நர வேட்டை'யும், காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்புடன் நடந்திருக்கிறது; மேற்படி 'படுகொலை'யில் நிகழ்ந்த போலீசின் அளவுகடத்தலை ஆய்ந்தறிய நியமிக்கப்பட்ட, தமிழர் நம்பிக்கை இழந்த விசாரணைக் குழுவும் காங்கிரஸ் விருப்பத்திற்கிணங்கவே பட்டத்தால் நியமிக்கப்பட்டுள்ளது, என்ற உண்மைகளையும் திரு-கொச்சி மக்கள் விளங்கிக் கொண்டுள்ளனர் என்பதை பல்வந்த்ராய் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ம. சோஷலிஸ்டு கட்சி, வெறும் பெயரளவில்தான் இன்று, திரு-கொச்சியில் ஆட்சிபுரிந்து வருகிறது. உண்மையில் ஆட்சிபுரிந்து வருவதோ காங்கிரஸ் கட்சிதான். அந்தக் காங்கிரசும் தம்மிச்சையாக இயங்கும் உரிமைகொண்டிருப்பதல்ல; அதை ஆட்டிப் படைக்கும் பெரிய விசை டில்லியில் உள்ளது.

டெல்லியிலுள்ள காங்கிரஸ் பீடத்திற்கோ, மொழிவழியில் மாநிலங்கள் திருத்தி அமைக்கப் படுவதும், நாஞ்சில் தமிழ்ப் பகுதிகள் சென்னை மாநிலத்துடன் இணைவதும், வெறுப்பளிக்கக்கூடியனவாக உள்ளன. எனவே, டெல்லியின் ஏவல்படி ஆடிக் கிடக்க வேண்டிய திரு-கொச்சி காங்கிரஸ், நாஞ்சில் தமிழர் கோரிக்கைக்குக் கொள்ளி வைக்க முனைவதில் ஆச்சரியப்படவும் அவசியமில்லை—அதிர்ச்சி கொள்ளவும் தேவை இல்லை!

தங்கள் கோரிக்கை வெற்றி பெற திரு-கொச்சி காங்கிரசை நம்பிக்கொண்டிருப்பதில் பயன் ஏற்படாது எனக் கண்டு, அதன் தொடர்பை அறுத்துக் கொண்டது போலவே, டில்லி காங்கிரஸ் நேர்மையில் வைத்துள்ள நம்பிக்கையையும் அறுத்துக் கொள்ள, தி. கொ. த. நா. காங்கிரஸ் குழு துணிவு கொள்ள வேண்டும். அப்பொழுது தான், கோரிக்கையில் வெற்றி ஏற்படும்.

# இரும்பு விலங்கு தகர்ந்தது!
## பொன் விலங்கு பூட்டப்பட்டுள்ளது!
## வடநாட்டு ஆதிக்கக்காரர்களிடமிருந்து விடுபடுவதே விமோசனம்

### புதுவை தி. மு. க. கோரிக்கை

“பிரெஞ்சு ஆட்சி நீங்கிற்று! இந்தியாவோடு இணைக்கப்பட்டோம்! இதனால், நம் அடிமை நிலை முற்றும் தீர்ந்துவிட்டதா?

“நம் கைகளைப் பிணைத்திருந்த இரும்பு விலங்கு தகர்க்கப்பட்டது! பதிலுக்குப் பொன் விலங்கு பூட்டப்படுகிறது! இவ்விலங்கு, பொன்னால் (இந்திய ஆட்சியாக) இருப்பது கண்டு பலர் பூரிப்படையலாம்; மகிழ்ச்சியுறலாம்! ஆனால், நம் உரிமைக் கரங்களைப் பிணைத்திருப்பது பொன் விலங்கேயாயினும், அதனை உடைத்தெறிய வேண்டிய கடமை நமக்குண்டு என்பதை நாம் மறந்துவிடவில்லை.

“சட்டபூர்வமான மாற்றத்துக்குப் பின் புதுவை முதலிய பகுதிகள் சென்னை மாநிலத்தோடு இணைக்கப்படும். அதன் பிறகு தான், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சுயரூபம், இங்குள்ளோர்களுக்குப் புலனாகும்! பிரெஞ்சு ஆட்சியில் நடைபெற்ற தீமைகளைத் தோற்கடிக்கும் வகையில், மக்கள் நடத்தப்படப்போவதும் விளங்கும்!

இன்று, சென்னை மாகாண மக்கள், வடநாட்டின் கூட்டுறவால் அனுபவித்துவரும் தொல்லைகள் மிகப் பலவாகும். தன் முக்கிய வருவாயை டில்லிக்குத் தந்து, தன் தேவைக்கு டில்லியிடம் கையேந்தி நிற்கிறது சென்னை அரசாங்கம்! இதனால், தன் அவசியத் தேவைகளை நிறைவேற்ற வகையின்றி, மக்களைப் பட்டினியால் மாளச் செய்து வருகின்றது! எங்கும் வறுமை, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம்!

“வடநாடோ, தென்னாட்டின் வருமானத்தால் கொட்டமடித்துக் கொழுத்து வருகிறது!

'தேசபக்தி,' 'தேசியம்' என்பன, இந்தச் சூதை மறைக்கும் திரைகளாக இருந்து வருகின்றன!

“நமது வருங்காலம், சென்னை மாகாணத் தமிழர் நிலையோடு இணைக்கப்படப் போவது நிச்சயம்! அப்போது நம் கடமை என்ன? வடநாட்டு ஏகாதிபத்தியப் பொன் விலங்கை உடைத்தெறியும் வலிமை, நம் நாட்டில் பிற கட்சிகளுக்கில்லை. திராவிட இயக்கம் ஒன்றுதான், தென்னாட்டு மக்களின் கரங்களுக்கு விடுதலையளிப்பதாகும்.

“ஆகவே, வடநாட்டு ஆதிக்கக்காரர்களிடமிருந்து நாம் விடுதலை பெற, இங்கு திராவிட இயக்கத்தை வலுப்பெறச் செய்ய வேண்டும். அதன் மூலம் தலைமைக் கழகங்களோடு தொடர்பு கொண்டு, திராவிட நாட்டைப் பெற்று, சுதந்திர, சமதர்மக் குடியாட்சியை நிலை பெறச் செய்ய வேண்டும். அப்போதுதான், உலகின் முன் நாம் முழு விடுதலை பெற்ற மனிதராக—உரிமையுடையவர்களாக—இன்ப வாழ்வு கொண்டவர்களாக இருக்க முடியும். ஆகவே அந்தகைய திராவிட ஆட்சி மலருவதற்குப் பணிபுரிவோமாக!

### எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

ரூ. 15 கோடி செலவில் கட்டப்பட்டது

15 கோடி ரூபாய் செலவில் பம்பாயில் நிர்மாணிக்கப்பட்ட எஸ். வி. ஓ. சி. எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலையை, மத்திய சர்க்கார் உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி, இத்திங்கள் 19-ந் தேதியன்று திறந்துவைக்கவிருக்கிறார். இத்தொழிற்சாலையில் 15-லட்சம் டன் எண்ணெயும் மற்றும் பொருட்களும் தயாரிக்கப்படுமாம்!

### நேபாளத்தில் அமைதியில்லை

கோரக்பூர், நவ. 2—

“நேபாளத்தில் சட்டமும், அமைதியும் நிலையாக இல்லை,” என்று நேபாள ஆலோசனைக் குழுவினைச் சேர்ந்த காஜி பிரசாத் ஸ்ரீவஸ்தவா கூறினார்.

நாட்டிலே ஏற்படுகிற ஒழுங்கீனங்களைப் பாதுகாப்பதில் சர்க்கார் வலிமையற்றிருப்பதாகவும், இந்திய சர்க்கார் உதவி செய்ய வேண்டுமென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அக்டோபர் திங்களில் புத்வால் மாவட்டத்தில் மட்டும் 30 கொள்ளைகள் நடைபெற்றன என்றும், போலீசார் ஒருவரையும் கண்டிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

### கென்யாவில் நிறபேதம்

15 ஆண்டுகளில் மறையுமாம்

கென்யாவில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பல இனங்களின் மந்திரி சபையின் உறுப்பினர், ஏ. பி. பட்டேன், “இன பேதமும், நிறத்தின் காரணமாக உள்ள தடைகளும் இன்னும் 15 ஆண்டுகளில் கென்யாவில் மறைந்துபோகும்,” என்று கூறியுள்ளார்.

இதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன என்றும், மனிதர்களிடையே இது போன்ற உறவுகள் வளர நீண்ட காலம் பிடிக்குமென்றும், சட்டத்தின் மூலம் மட்டும் இதை அடைய முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

### நார்கே - நார்ஜே ஆகிறார்!

டார்ஜிலிங், நவ 3—

எவரெஸ்ட் மலையுச்சியில் ஏறிய வீரர் டென்சிங் நார்கே, தனது பெயரை 'நார்ஜே' என்று மாற்றிக்கொள்ள விரும்புகிறாராம்.

'நார்ஜே' என்றால், ஏராளமான செல்வமுடையவர் என்பது பொருளாம்.

### சூடானுக்கு இந்திய நீதிபதிகள்!

15 பேர் நியமிக்கப்படுவார்கள்!

சூடான் சர்க்கார், இந்தியாவிலிருந்து 15 நீதிபதிகளின் சேவையைப் பெறுவார்கள் என்று தெரிகிறது.

சூடானில் நீதி, நிர்வாகப் பிரிவினை ஏற்பட்டவுடன் இந்த நீதிபதிகள் பயன்படுத்தப்படுவார்கள்.

“நீதிபதியாகச் செல்ல விருப்பமுடையோர் உள்ளனரா?” என்று இந்திய சர்க்கார் ஐதராபாத் உயர் நீதி மன்றத்திடம் கேட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்த நீதிபதிகள் உருது மொழி தெரிந்தவர்களாக இருப்பது நல்லது என்று கருதப்படுகிறதாம்.

இவர்கள் முதலில் ஐந்து அல்லது ஆறு ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

சூடானின் நீதி அமைப்பு இந்தியாவைப் போன்றதே என்றும், சூடான் பீனல்கோட், இந்தியன் பீனல்கோட் இரண்டும் ஒருமைப்பாடுடையதே என்றும் தெரிகிறது.

# பட்டம் தாணுவின் ஆட்சிக்கு திரு-கொச்சி மக்கள் எதிர்ப்பு

## லஞ்சம், உத்தியோக ஊழல் குற்றங்களடங்கிய அறிக்கை

" திரு-கொச்சி மாநிலத்தில், கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, மாநிலத்தில் உருவான நெருக்கடிக்குப் பரிகாரம் காணும் வகையில், சிறுபான்மைக் கட்சியான மக்கள் சோஷலிஸ்டு கட்சிக்கு, காங்கிரஸ் தனது ஆதரவை அளித்தது.

" காங்கிரஸ் ஆதரவுடன் திரு. பட்டம் தாணுப்பிள்ளை மாநில நன்மைகளுக்காக செயல்பட முடியும் என்ற நம்பிக்கையாலேயே காங்கிரஸ், மக்கள் சோ. கட்சிக்கு தனது ஆதரவைத் தந்தது.

" ஆனால், பட்டம் சர்க்காரின் ஆட்சி சிறப்பானதாக இல்லை; மாநிலத்தின் நலன்களை நசுக்கும் தீச்செயல்கள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வருகின்றன.

" நல்லாட்சி நிறுவுவதற்கு மாறாக, ம. சோ. கட்சியினர், கட்சி நலன்களுக்கான காரியங்களிலும், மாநிலத்தின் பொருளாதார நிலைமையை உருக்குலைக்க உதவும் நடவடிக்கைகளிலும் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது.

" ம.-சோ. கட்சியினர் ஜனநாயகக் கோட்பாடுகளின்படி, ஆட்சி முறைகளில் அதிமுக்கியமானவற்றை மற்றக் கட்சியினருடன் கலந்தாலோசிக்காமலேயே, சொந்தமாகவே யதேச்சாதிகாரமாக இயங்குகின்றனர்.

" கைக்கூலி, லஞ்சம், நியமனங்களில் ஊழல் முதலியன பற்றிய தெளிவான குற்றச்சாட்டுக்கள் வெகுவாகப் பரவி வருகின்றன.

" பட்டம் ஆட்சி, பொருளாதார நெருக்கடி குறித்து எவ்வித கவலையும் கொள்வதாகக் காணோம். அரசியல் ஆதிக்கப் பாதுகாப்புக்காக மட்டும் புதிய ஏற்பாடுகளை வகுக்கின்றனர்.

" இந்த ஆட்சியில் இங்குள்ளவர்களுக்கு மிகுந்த மனக்கசப்பு உண்டு. இன்றைய படுமோசமான நிலைமை மாறும் காலம் சமீபித்துவிட்டது."

—இவ்வாறு, திரு-கொச்சியில் உள்ள சங்கனசேரி என். எஸ். எஸ். கல்லூரியில் சென்ற ஞாயிறன்று நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகள் கூட்டமொன்றில், இன்றைய அரசியல் நிலைகள் விரிவாக ஆராயப்பட்டு பின் தயாரித்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் பல கட்சி பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருக்கின்றனர். கூட்டத்திற்கு திரு. மன்னத்து பத்மனாபன் தலைமை தாங்கினார்.

திரு-கொச்சி சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரான திரு. பனம்பள்ளி கோவிந்தமேனன், கூட்டத்தில் பேசியவர்களுள் மிக முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும், கூட்டத்தில், திரு—கொச்சி மக்களின் நலன்களைக் காக்கும் பொருட்டு, அவ்வப்போதைய அரசியல் நிலைகள் குறித்து மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றி, அவற்றை மனப்பூர்வமாக அமுல் நடத்த ஜனப் பிரதிநிதிகளின் செயற்குழு ஒன்றை நிறுவும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

# மற்றொரு மந்திரி சபைக்கு ஆபத்து?

### பாகிஸ்தானில் புதிய மாற்றங்கள் ஏற்படலாம்?

லாகூர், நவ. 4—

மேற்கு பாகிஸ்தானின் சில மாநில சர்க்கார்களிலும் மத்திய மந்திரி சபையிலும் மேற்கொண்டு சில மாறுதல்களை எதிர்ப்பார்க்கலாம் என்று 'பாகிஸ்தான் டைம்ஸ்' இதழ் தெரிவித்திருக்கிறது.

அடுத்த சில நாட்களுக்குள் மற்றொரு மாநிலத்தில் மந்திரி சபை ஆட்சி நீக்கப்படும் என்று தெரிகிறது.

நாடு முழுமையும் அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டிருப்பதை யொட்டி, மாகாண சட்டசபைகளின் நிலை என்னவென்று பாகிஸ்தான் சட்ட இலாகா சிந்திக்கிறதாம்.

அநேகமாக எல்லா சட்டசபைகளும், தற்காலிகமாக சட்டமியற்றுவதை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம் என்று 'டைம்ஸ்' இதழ் தெரிவிக்கிறது:

இரகசியப் போலீஸ் இலாகா, இப்போது, நேரடியாக முகமது அலியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்.

# மலபார் மாவட்டக் கழகத் தேர்தல்

### பெரும்பான்மை இடங்கள் கம்யூனிஸ்டுகளுக்கு!

மலபார் மாவட்ட கழகத் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பிடித்துள்ளது.

கம்யூனிஸ்டுகளும், அவர்களின் ஆதரவைப் பெற்ற சுயேச்சைவாதிகளுமாக 48 இடங்களில் போட்டியிட்டு 24 இடங்களைப் பிடித்தனர்.

ஆனால், காங்கிரஸ் கட்சியினர் 45 இடங்களில் போட்டியிட்டு 15 இடங்களில் மட்டுமே வெற்றிபெற முடிந்திருக்கிறது.

பி.-சோ: கட்சியினர் 22 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடம் மட்டும் பிடித்தனர். ஆனால், முஸ்லிம் லீக், 22 இடங்களில் போட்டியிட்டு 8 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது.

கடந்த தேர்தலில் மலபார் மாவட்டத்தில் காங்கிரஸ் 4,83,009 ஓட்டுகளைப் பெற்றது; ஆனால், இப்போது 4,12,452 ஓட்டுகள் மட்டுமே பெற முடிந்தது; 73,557 வாக்குகள் குறைவு.

கம்யூனிஸ்டுகள் கடந்த தேர்தலில், 3,02,355 ஓட்டுகள் பெற்றவர்கள் இப்போது 4,46,955 வாக்குகள் பெற்றிருக்கின்றனர்; 1,44,600 வாக்குகள் அதிகம் பெற்றுள்ளனர்.

பி.-சோ.-க்களும், சுயேச்சைகளும் கடந்த தேர்தலைக் காட்டிலும் வெகு குறைவான வாக்குகளே பெற்றன; ஆனால் முஸ்லிம் லீக் சற்று அதிகம் பெற்றிருக்கிறது.

புதிய அங்கத்தினர்கள் நவ. 26-ந் தேதி கூடி தலைவரைத் தேர்ந்தெடுப்பரெனத் தெரிகிறது.

### ஐ. நா. பாதுகாப்பு சபையில் எகிப்திய தூதுவர் மரணம்

ஐக்கிய நாட்டு பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில், எகிப்து பிரதிநிதிகள் குழுவின் தலைவர் டாக்டர் மஹமத் அசமி, திடீரென்று மயக்கமுற்றுக் கீழே விழுந்து, மாரடைப்பால் அகால மரணமடைந்தார்.

# சென்னை மாநிலத்தில் செயற்கை மழை

### சென்னை நகரில் டிசம்பரில் நடைபெறுமாம்!

சென்னை மாநிலத்தில் செயற்கை மழை சம்பந்தமான சோதனைகள் செய்வது பற்றி, சென்னை அரசாங்க அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

மழை பெய்யச செய்வதற்காக, மேகத்தில் 'கால்சியம் குளோரைடு' தூவுவது பற்றி விவாதிக்கப்பட்டு, பின்னர், மழையே பெய்யாத இடங்களில் இப்பரிசோதனைகளை நடத்துவதில் பிரயோசனமில்லை யென்றும், ஆகவே, சிறிதளவு மழை பெய்யும் இடங்களில் அதிக மழை பெய்யச் செய்ய முயற்சிப்பதே முக்கியம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இப் பரிசோதனைகள், முதன் முதல் டிசம்பர் மாதத்தில் சென்னை நகரிலேயே நடைபெறலாம் என்றும், இப் பரிசோதனைகளை நடத்த சென்னை விவசாயப்பண்ணை ஊழியர்களின் உதவியைக்கொண்டு ரூ. 20,000க்கு மேல் போகாமல் செலவு செய்து கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில், சில இடங்களில்தான் பரிசோதனை நடைபெறும்.

மேகங்களில் தூவ வேண்டிய பொருட்களை, ஒரு பலூனில் அடைத்துக் கட்டி ஆகாயத்தில் பறக்கவிட்டு, அது மேலே சென்றதும், பலூனை வெடிக்கச் செய்து செயற்கைமழையை உண்டுபண்ணலாம் என்றும் கூறப்பட்டது. இவ்விதப் பரிசோதனை சில இடங்களில் தான் நடைபெறுமெனவும் இப் பரிசோதனைகளின் விளைவை மாதந்தோறும் பரிசீலனை செய்ய அதற்கென்று ஒரு குழுவும் நியமிக்கப்படலாம் என்றும் தெரிய வருகிறது.

# குடும்பக் கட்டுப்பாடு

### சென்னையின் திட்டங்கள்

மத்திய சர்க்காரின் உதவியுடன், சென்னை சர்க்கார், 7 குடும்பக் கட்டுப்பாடு திட்ட ஆலோசனை நிலையங்களையும், ஒரு குடும்பக் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிலையத்தையும் ஏற்படுத்த உத்தேசித்துள்ளதாகவும், இந்த ஆராய்ச்சி நிலையத்தை சென்னையிலுள்ள பெண்கள், குழந்தைகளுக்கான மருத்துவ மனையில் ஏற்படுத்துவதென்றும், மற்ற நிலையங்களை மதுரை, கோயம்புத்தூர், கோழிக்கோடு, மங்களூர் ஆகிய இடங்களிலுள்ள சர்க்கார் மருத்துவ மனைகளில் ஏற்படுத்துவதெனவும், மேலும் உள்ள 3 நிலையங்களையும், பூந்தமல்லி சுகாதார நிலையம், திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் பெண்கள் மருத்துவமனை, இராயபுரம் ராஜா சர் ராமசாமி முதலியார் பெண்கள் மருத்துவமனை ஆகியவற்றில் நிறுவுவதாகவும், முடிவு செய்துள்ளதாம்.

குழந்தைகளைக் குறைத்துக் கொண்டு குடும்பத்தைக் கட்டுப்படுத்த விரும்புவோருக்கு, இந்த நிலையங்களில் ஆலோசனை கூறப்படும்.

# உர விநியோகம்

### நடைமுறையில் மாறுதல்

சென்னை, நவ. 3—

உண்மையாகவே விவசாயத் தொழிலீடுபட்டிருப்பவர்களுக்கு, நெற் பயிருக்கு உரம் போடுவதற்காக, அமோனியம் சல்பேட் உரம், தேவைக்கேற்ப எவ்வளவு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம் என்று சென்னை சர்க்கார் உத்திரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

இனிமேல், இவ்வுரங்களை வாங்க ரயத்துகள், கிராம அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்று, விற்பனையாளர்களிடம் காட்டத் தேவையில்லை.

# பஸ்களில் நின்றுகொண்டு பிரயாணம் செய்ய சென்னை சர்க்கார் அனுமதி!

சென்னை மாநிலத்தில், சென்னை நகரில் மட்டுமின்றி, வெளியூர்களில் ஓடும் பஸ்களிலும், பிரயாணிகளில் சிலர் நின்று கொண்டு பிரயாணம் செய்வதை சென்னை சர்க்கார் இப்போது அனுமதித்து உத்திரவு பிறப்பித்துள்ளது.

வெளியூர் பஸ்களில் ஒரு குறிப்பிட்ட அளவு பிரயாணிகள் நின்று கொண்டு பிரயாணம் செய்வதை அந்தந்த வட்டத்து அதிகாரிகள் அனுமதிக்கலாம். ஆனால், சில குறிப்பிட்ட பாதைகளில் ஓடும் பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் நின்று கொண்டு பிரயாணம் செய்யலாமா என்பதை, அந்த வட்டத்து அதிகாரிகள் நிர்ணயிக்க வேண்டும். அவர்கள் நின்று கொண்டு பிரயாணம் செய்வது கூடாதென விரும்பினால் அனுமதி கிடைக்காது.

20 முதல் 24 பிரயாணிகள் வரை ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படும் பஸ்களில் 4 பிரயாணிகள் மட்டும் நின்று கொண்டு பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படும். பஸ்களில் நின்றுகொண்டு பிரயாணம் செய்பவர் எண்ணிக்கை 5 ஆகவும் இருக்க வேண்டுமென சர்க்கார் உத்திரவு கூறுகிறது.

# காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு

### பண்டிதர் கலந்துகொள்கிறார்

அடுத்த ஆண்டு ஜனவரி திங்கள் 31-ந் தேதியன்று, லண்டனில் நடைபெற இருக்கும் 'காமன்வெல்த்' பிரதம மந்திரிகளின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரும் கலந்து கொள்வாராம். இச்செய்தியை இந்திய வெளிநாட்டிலாகா அதிகார பூர்வமாக அறிவித்திருக்கிறது. பாகிஸ்தான் பிரதமர் முகமது அலியும் இம்மாநாட்டில் கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் பிரதமர் சர்ச்சில் கூட்டியுள்ள இம்மாநாட்டில், பாகிஸ்தான் குடியரசாகும் திட்டம் பற்றியும் விவாதிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் முகமதலி, காஷ்மீர் தகராறு, கால்வாய் நீர் தகராறு ஆகியவற்றை எழுப்புவார் என்று தெரிகிறது.

# அதிகாரிகளை தாக்கிய தொழிலாளர்கள்

### நான்கு பேர் கைது

பெங்களூர் மகாராஜா பஞ்சாலையிலுள்ள தொழிலாளர்கள், சம்பள உயர்வு கோரி, 3 அதிகாரிகளைத் தாக்கிக் காயப்படுத்தினராம். அதிகாரிகள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம். வழக்குப் பதிவு செய்யப்பட்டு போலீஸ் புலன்விசாரணை நடைபெறுகிறது.

# வழக்கு வாபஸ்!

புதுவையில் பிரெஞ்சு சர்க்காரின் அதிகாரிகளைத் தாக்கிய குற்றத்திற்காக பிரெஞ்சிந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் வி. சுப்பையா, மற்றும் பிரெஞ்சிந்திய இணைப்புக் காங்கிரஸ் செயலாளர் தாதவா என்பவர் மீதும் தொடரப்பட்டிருந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுவிட்டன.

கிருஷ்ணதத் என்ற நீதிபதியின் முன் அவ்வழக்குகள் தொடரப்பட்டிருந்தனவாம்.

### புதுவைக்கு மேட்டூர் மின்சாரம்

இன்னும் 10 தினங்களில், புதுச்சேரிக்கு, மேட்டூரிலிருந்து மின்சார வினியோகம் ஆரம்பிக்கப்பட்டு விடுமென்றும், அதற்கான வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவின் புதிய தூதுவர்?

### தேர்தலில் தோல்வியுற்றவர் நியமனமாவார்?

இந்தியாவில் அமெரிக்காவின் புதிய தூதுவராக ஜான் ஷெர்மன் கூப்பர் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

இவர், இப்போது நடைபெற்ற தேர்தலில் அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மேல்சபையான செனட்டிற்கான தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்.

இப்பதவிக்கு திருமதி பிராங்ளின் ரூஸ்வெல்ட்டின் பெயரும் கூறப்படுகிறது. என்றாலும், குடியரசுக் கட்சியினர் ஒருவரையே ஐசன்ஹோவர் நியமிப்பார் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

# பிரம்மாண்டமான போர்க் கப்பல்

### இரு ஆண்டுகளுக்கு மேலாக 16,000 தொழிலாளிகள்கட்டினர்.

உலகிலேயே இதுவரையிலும் கட்டப்படாத பிரம்மாண்டமான போர்க் கப்பல் ஒன்று, வர்ஜீனியா துறைமுகத்திலிருந்து டிசம்பர் திங்கள் 15-ந் தேதியன்று புறப்படுமென்று தெரிய வருகிறது.

'போரெஸ்டல்' என்ற பெயருடைய இக்கப்பலின் நீளம் 1,036 அடி; அகலம் 252 அடி; நிறை 59,650 குரோஸ் டன்கள் எடை என்று தெரிகிறது.

கப்பலைக் கட்டும் வேலையில் 16,000 தொழிலாளர்கள், 1952-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஈடுபட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கப்பலில் சுமார் 3,500 மாலுமிகள் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாம். அணுகுண்டுகளை எறியும் விமானங்கள், இக் கப்பலில் இறங்கவும், கப்பலிலிருந்து வெளியே பறந்து செல்வதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாம்!

இந்தக் கப்பலைக் கட்டுவதற்குப் பிரிட்டிஷ் எஞ்சினீயர்களின் யோசனையும் பெறப்பட்டுள்ளதாம். மேலும் இதைப் போன்று வேறொரு கப்பலும் 'ரேஞ்சர்' என்ற பெயருடன் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

# காகிதம் தயாரிக்கும் மரக்கூழ்

### இந்தியாவிலேயே உற்பத்திசெய்ய திட்டம்

கல்கத்தா, நவ. 2—

காகிதம் உற்பத்தி செய்வதற்கு மிகத் தேவைப்படும் மரக்கூழ், இந்தியாவிலேயே தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

தற்போது, அயல் நாடுகளிலிருந்துதான் இம்மரக்கூழ் வரவழைக்கப்படுகிறது. 1951 - 52-ம் ஆண்டில் ரூ. 102 லட்சம் மதிப்பும், 1953—54-ல் ரூ. 107 லட்சம் மதிப்புமுள்ள மரக்கூழ் வரவழைக்கப்பட்டிருக்கின்றதாம்.

# ஐதராபாத் சர்க்காருக்கு...

### டில்லி ரூ. 14 கோடி வழங்கும்

ஐதராபாத் மாநில சர்க்காருக்கு, மத்திய சர்க்கார், தனது நிதி இணைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 14 கோடி கொடுக்குமாம்:

ஐதராபாத்தின் தபால், ரயில்வே, நாணயச் செலாவணி, சாலைகள் ஆகியவைகளை மத்திய சர்க்கார் மேற்கொண்டதற்குப் பதிலாகவே இந்த நிதி அளிக்கப்படுகிறதாம்.

# நான்கு வாரங்களாக நடைபெறும் வேலைநிறுத்தம்

## புல் அறுப்புக் கூலி விகிதத்தால் வந்த சிக்கல்!

## 25,000 உழவர்கள் கலந்துகொண்டுள்ளனர்

சூரத், நவ. 5—

**பர்தி தாலுக்காவில் உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கும், நிலமற்ற உழவர்களுக்குமிடையில் உள்ள பகை முற்றி வருகிறது. 25,000 நிலமற்ற உழவர்கள், நிபந்தனை கொண்ட ஒத்துழை யாமையை மேற்கொண்டுள்ளனர். நான்கு வாரங்களாக இந் நேரடி நடவடிக்கை நடைபெற்று வருகிறது.**

தினசரி 1—8—0 வீதம் நபர் ஒன்றுக்குக் கூலி கொடுத்தால் அல்லாது, புல் அறுக்க முடியாது என உழவர்கள் கூறுகின்றனர். மேற்படி கூலி விகிதம் நஷ்டத்தை உண்டாக்குமெனவும், எனவே, ஒரு ரூபாய்தான் கூலி கொடுக்க முடியும் எனவும் காரணம் காட்டி நிலச் சொந்தக்காரர்கள், உழவர்கள் கோரிக்கையை மறுக்கிறார்கள்.

இந்த ஒத்துழையாமை, குஜராத் ம. சோ. கட்சியின் கண்காணிப்பில், சென்ற மாதம் 10-ந் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இப்போராட்டம் அமைதியாக நடைபெற்று வருவதாக உழவர்கள் சார்பிலும், வேலைக்கு வருபவர்களைத் தடுத்தும் மறித்தும் உழவர்கள் பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளதாக போலீஸ் சார்பிலும் கூறப்படுகின்றன.

நான்கு வாரங்களாக நடைபெற்றுவரும் உழவர் போராட்டத்தில், இதுவரையில் போலீசாரால் இரண்டு வழக்குகளைத்தான் பதிவு செய்ய முடிந்தது. 13 உழவர்களைத்தான் போலீஸ் கைது செய்தும் இருக்கிறது.

## பக்தூனிஸ்தான் கோரிக்கை

**'பயங்கரவாதி'யின் எதிர்ப்பு**

இபி பக்கிரியின் வலது கரமாகவும், வாரிசாகவுமிருந்த கலிபா மேகர் தில் என்பவர், எல்லைப்புற மாநிலத்தைச் சேர்ந்த பன்னு எனுமிடத்தில் உள்ள அதிகாரிகளிடம் சரணடைந்துவிட்டார்.

கலிபா மேகர் தில், கடந்த 18 வருட காலமாக எல்லைப்புற மாநிலத்தின் தென் மாவட்டங்களில் ஒரு பெரும் பயங்கரவாதியாயிருந்தார்.

"இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் பலமுடன் இருக்கப் பாடுபடுவோம்; பக்தூனிஸ்தான் கோரிக்கையை ஆதரிக்கமாட்டோம்"

என்று அவர் தனது சார்பிலும் தனது சகாக்கள் சார்பிலும் உறுதிமொழியினை அதிகாரிகளிடத்தில் அறிக்கை ஒன்றின் மூலம் தந்துள்ளார் எனத் தெரிகிறது.

அவர் சரணடைந்து விட்டமையால் மகிழ்ச்சியுற்ற பாக். கவர்னர்-ஜெனரல் அவரை மன்னித்துவிட்டது மட்டுமின்றி அவர், தன் வாழ்நாள் முழுதும் சுகமாகக் காலங் கழிக்க வேண்டிய அளவு பண உதவியும் செய்ய உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

### சிற்றுளி-சுப்பிரமணியம் சுற்றுப்பிரயாணம்

நவ. 7 கூடலூர் (ஓ. டி.)
8 நெல்லிக்குப்பம்
14 காட்டுப்புத்தூர்
15 காளப்பநாய்க்கன்பட்டி

### சென்னை 5-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

9—11—54 மாலை 6 மணிக்கு சென்னை, 5-வது வட்ட (கிளை) தி. மு. கழகத்தில் செயற் குழுவின் அவசரக் கூட்டமொன்று நடைபெறும்.

## கழகக் கூட்டங்கள்

★

**திருவண்ணாமலை**
7-11-54 மாலை 7 மணிக்கு
தலைவர் : கலீல்
பேசுவோர் :
முகவை ஆர் எஸ்.பாண்டியன்
வி. எஸ். கோவிந்தராசன்
இரா. தர்மலிங்கம்

★

**ஈரோடு**
காரைவாய்க்கால் மைதானத்தில்
8-11-54 மாலை 6-30 மணிக்கு
தலைவர் : ஈ. வெ. கி. சம்பத்
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

★

**ஊத்துக்குளி**
தி. மு. கழக ஆண்டு விழா
காந்தி மைதானத்தில்
9—11—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு
கோவை அரசு

## பொதுக் கூட்டம்

9—11—54 மாலை 6 மணிக்கு சென்னை, கினிமா சென்டிரல் அருகிலுள்ள ஆனைக்கார கோனான் தெருவில், தோழமைக் கழகச் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். இலங்கைத் தோழர் கே. ஆர். இராசு தலைமை வகிப்பார். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ள இசைவு தந்துள்ளனர் என தோழமைக் கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

7—11—54 காலை 10 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண். 17, சாலைவிநாயகர் கோவில் தெருவில், தோழர் சு. மாரியப்பன் தலைமையில், 'பொதுத் தொண்டு' எனும் பொருள் பற்றி முத்தமிழ் மன்றத் தோழர்கள் பேசுவர்.

### திரு. வி. க. நினைவு நாள்

7—11—54 காலை 10 மணிக்கு சென்னை, சூளை, மாணிக்கச செட்டித் தெரு, நகர இளைஞர் கழகக் கட்டிடத்தில், ஆதி. தேவநாதன் தலைமையில் தோழர் எம். என். முத்துகிருஷ்ணன் பேசுவார்.

# சென்னை நகரசபைக்கு வருமானம் போதவில்லை!

## சர்க்காரும் மானியமோ கடனோ தாராளமாகத் தருவதில்லை

## நிர்வாகத் தரக் குறைவுக்கு கமிஷனர் காட்டும் காரணம்!

1953—54-ம் ஆண்டிற்கான சென்னை நகர சபையின் நிர்வாகம் பற்றி, நகர சபை கமிஷனர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது :—

"போதிய வருவாயில்லாததால், நகரத்தின் நல வசதிகளை அபிவிருத்தி செய்ய முடியவில்லை; புதிய பிரதேசங்களுக்கும் வசதிகளைப் பரப்ப இயலவில்லை.

கீழ்க் கண்ட காரணங்களாலும் நிலைமை மேலும் மோசமாகப் போய்விட்டது.

சென்னை நகர எல்லையுடன் சேர்க்கப்பட்டிருக்கும் சுற்றுப்புறமுள்ள 20 சதுர மைல் விஸ்தீரணமுள்ள அபிவிருத்தி செய்யப்படாத பிரதேசங்களில் வசிப்பவர்கள் தங்களுக்கு வசதிகள் செய்துதரக் கோருகின்றனர்.

சென்ற சில ஆண்டுகளில் மழை பெய்யாமற் போகவே, கிராமங்களில் வேலையில்லாமல் இருந்த லட்சக் கணக்கான மக்கள் சென்னை நகருக்கு வந்து, தங்களுக்குப் பிடித்தமான இடங்களில் குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்ந்து, இப்போது சுமார் 250 சேரிகளுக்கு மேல் ஏற்படுத்திவிட்டனர்.

கட்டிடச் சாமான்களும் கூலியும் அதிகரித்துவிடவே, நிர்வாகச் செலவும் அதற்கேற்ப அதிகரித்துவிட்டது; ஆனால், அதே விகிதத்திற்கேற்ப வருமானம் அதிகரிக்கவில்லை.

1939—40ம் ஆண்டில், நகர சபையின் மொத்த வருமானம் ரூ. 73,35,339.

விஸ்தரிக்கப்பட்ட 20 சதுர மைல் பிரதேசங்களுக்கும் வசதிகள் செய்துதர வேண்டியது ஏற்பட்டதால், நிர்வாகச் செலவு அதிகரித்துவிட்டது; இதனால், நகர சபைக்கு ஆண்டொன்றுக்கு மேலும் ரூ 3,30,00,025 அதிகம் தேவையாகும்; இவற்றுடன் சேரி அபிவிருத்திக்காக வாங்கப்பட்ட கடனைத் திருப்பித்தரும் தொகை; சேரிகளுக்கு செய்து தரவேண்டிய வசதிகள் ஆகியவற்றைச் சேர்த்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 40 முதல் 50 லட்சம் வரை செலவாகும். இவற்றிலிருந்து நகரசபையின் தற்போதைய வருட வருமானமாகிய ரூ. 235 லட்சம் போதாதென்பது தெளிவாகும்.

வரி விசாரணைக் குழு, ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் போதிய பணம் ஒதுக்க சிபாரிசு செய்யும் என்று நம்பப்படுகிறது. மேலும் சர்க்காரும் போதிய அளவு கடன் கொடுக்காமற் போனமையால் பல உபயோககரமான திட்டங்கள் யாவும், நகரசபையினரால் மேற்கொள்ள முடியாமற் போய் விட்டது.

சென்னை நகரில், மோட்டார் வண்டிகள் வரியாக ரூ. 45 லட்சம் கிடைப்பதில், ரூ. 3 லட்சத்து 75 ஆயிரம்தான் நகரசபைக்கு, சாலைகள் பராமரிப்புக்காக கிடைக்கிறது.

மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் சாலைகள் பராமரிப்புக்காக சர்க்கார் ரூ. 6 கோடி செலவிடுகிறது; ஆனால் அதற்கென வசூலாகும் தொகை 2 கோடி 22 லட்சம் ரூபாய்தான். சென்னை நகர சாலைகள் பராமரிப்புக்காக சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டதின் பேரில், சர்க்கார் மானியம் அளிப்பது பற்றி யோசித்து வருகுறது. சர்க்கார் வேண்டிய அளவுக்கு மானியம் வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1953-ல், சேரிகள் அபிவிருத்திக்கு ரூ. 6,39,476 செலவிடப்பட்டது. மேலும், ஒரு கோடி ரூபாய் செலவிட்டு 31 சேரிகளை அபிவிருத்தி செய்ய நகரசபை ஒரு திட்டம் சமர்ப்பித்துள்ளது.

நகரசபையின் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 243-லிருந்து 253 ஆக உயர்ந்துள்ளது. படிப்போரின் எண்ணிக்கையும் 4,000-த்துக்கு மேல் அதிகரித்துள்ளது. சேரிப் பகுதிகளில் 11-பள்ளிகள் துவக்கப்பட்டன. நகரசபையின் பள்ளிக்கூடங்களில் மொத்தம் 79,011 பேர் படிக்கிறார்கள்.

"வெஷனாய் நகர் குடியிருப்புத் திட்டம், நகர சபை மேற்கொண்டுள்ள ஒரு முக்கியமானதொன்றாகும். இத்திட்டப்படி 1,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மொத்தம் ரூ. 1,75,480 செலவில் 6 வீடுகள் கட்டப்பட்டன.

"இந்த ஆண்டு சிக்கனத் திட்டம் அமுல் நடத்தப்பட்டு பல இலாகாக்களில் ஆட்குறைப்புகள் செய்யப்பட்டன.

கடந்த 3 ஆண்டுகளில் நகர சபையின் மொத்த வரவு செலவு கணக்குகளைப் பார்த்தால், வருமானம் குறைந்து செலவு அதிகரித்திருப்பது காணப்படும்.

1951—52ம் ஆண்டில் நகர சபையின் மொத்த வருமானம் ரூ. 235.52 லட்சம்—செலவு 213.09 லட்சம்;

1952-53ல் வரவு 231.54 லட்சம்—செலவு 228.73 லட்சம்;

1953-54ல் வரவு ரூ. 223.22 லட்சம்—செலவு 236.52 லட்சம்.

## இஸ்ரேல் தாக்கப்பட்டால் பிரிட்டன் உதவும்!

ஈடன் அறிவிப்பு

"இஸ்ரேல் எந்த ஒரு அராபிய நாட்டினரால் தாக்கப்பட்டாலும், பிரிட்டன் அதற்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது." என்று பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா மந்திரி மக்கள் சபையில் கூறினார்

அவர் மேலும் சொன்னார் :—

"இஸ்ரேல் மட்டுமல்ல, மத்திய கிழக்கில் உள்ள எந்த ஒரு அராபிய நாட்டையும், மற்றொரு அராபிய நாடு தாக்குமானால், தாக்கப்படுகிற நாட்டிற்கு, பிரிட்டன் மட்டுமின்றி, அமெரிக்காவும், பிரான்சும்கூட உதவிபுரியக் கடமைப்பட்டிருக்கின்றன—1950-ம் வருடத்திய ஒப்பந்தப்படி," என்றார்.

# நாடகக் கழகத்தை அலட்சியப்படுத்தியதின் எதிரொலி!

## 'தியேட்டர் சென்டர்' அமைப்பிற்கு டி. கே. ஷண்முகம் தலைமுழுக்கு!

## பத்திரிகையாளரிடை கலைவாணர் விளக்கம்

சென்னை, நவ. 5—

டெல்லியில் நடைபெறவிருக்கும் தேசீய நாடக விழாவில் கலந்து கோள்வதற்காக, தமிழ் நாட்டிலிருந்து நாடகங்களைத் தேர்ந்தெடுப்பதில் டெல்லி வட்டாரத்தினர், நாடகக் கழகத்தையும், தென் இந்திய நடிகர் சங்கத்தையும் அலட்சியப்படுத்தியதின் எதிரொலியாக 'தியேட்டர் சென்டர்' என்ற அமைப்பின் சென்னை கிளையின் துணைத் தலைவராக இருந்த பிரபல நாடக, சினிமா நடிகரான டி. கே. ஷண்முகம் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

அவரைப் பின்பற்றி டி. என். சிவதாணு என்ற நடிகரும், அந்த அமைப்பின் செயற்குழு உறுப்பினர் பொறுப்பினின்றும் விலகிக் கோண்டுவிட்டதாக அறிவித்துள்ளார்.

நாடகக் கழகத்தினையும், தென்னிந்திய நடிகர் சங்கத்தினையும் வட நாட்டவர் அலட்சியப்படுத்தி, தம்மிச்சையாக 'தியேட்டர் சென்டர்' என்ற அமைப்பிடம் தேசீய நாடக விழாவினுக்கு நாடகங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பினைத் தந்ததையொட்டி எழுந்துள்ள நிலைகளை விளக்கி, நாடகக் கழகத் தலைவர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கண்டன அறிக்கை ஒன்றும் வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையாளரிடம் பேசுகையில் திரு. கிருஷ்ணன் அவர்கள், குறிப்பிட்டதாவது :—

"நாடகக் கழக நிர்வாகிகளுக்கு பிராந்திய நாடக விழாக் குழுவில் இடமில்லை. ஒரு தேசிய விழாவில் நாடகத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த கலை அம்சங்கள் பொருந்திய நாடகங்கள் இடம் பெற வேண்டுவது அவசியம்.

"தேசீய நாடக விழாக் குழுவின் பிராந்தியக் கிளை, அனுவமில்லாத ஒன்றாகும்; அது, சிறந்த நாடகங்களைத் தேர்ந்தெடுப்பதில் நல்ல அனுபவம் வாய்ந்த அமைப்பான நாடகக் கழகத்தின் யோசனையைக் கூட கலந்து பெற்றுக் கொள்ளவில்லை. ப்படியிருக்க, அது தேர்ந்தெடுக்கும் நாடகங்கள் டெல்லியில் நடிக்கப்படும்போது, அவை, இந்தப் பகுதியின் சிறந்த கலை அம்சங்களையும், திறனையும் பிரதிபலிப்பதாக இருக்க முடியாது; எனவே, டெல்லியில் நடைபெறும் விழாவும் ஒரு தேசிய விழாவாக இருக்க முடியாது," என்றார்.

நாடகக் கழகத் தலைவரான நடிகர் திரு. டி. கே. ஷண்முகம், 'தியேட்டர் சென்டர்' என்ற தேசிய நாடக விழாக் குழுவின் சென்னைக் கிளையின் துணைத் தலைவராயிருந்தார். அவர் இப்போது அந்தப் பதவியை ராஜினாமா செய்து விட்டதுடன் டெல்லி 'தியேட்டர் சென்டர்' என்ற அமைப்பின் எதேச்சாதிகாரப் போக்கையும் கண்டித்து அறிக்கை தந்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.